அந்தரங்கமானது

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2018

## 43 - கிறிஸ்தவம்

## புள்ளியிடும் திட்டம்



இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன

முழுப்பதிப்புரிமையுடையது

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் □ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

| | | |
|---|---|---|
| (i) ..................................................... | ✓ | △ $\frac{4}{5}$ |
| (ii) ..................................................... | ✓ | △ $\frac{3}{5}$ |
| (iii) ..................................................... | ✓ | △ $\frac{3}{5}$ |

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. க.பொ.த.(உ. தர) மற்றும் தகவல் தொழிநுட்பப் பரீட்சைக்கான துளைத்தாள் திணைக்களத்தால் வழங்கப்படும். சரியாக துளையிடபட்டு அத்தாட்சிப்படுத்திய துளைத்தாள் தங்களுக்கு கிடைக்கப்பெறும். அத்தாட்சிப்படுத்திய துளைத்தாளைப் பயன்படுத்துவது பரீட்சகரின் கடமையாகும்.
2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை O அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்களை தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

**புள்ளிப்பட்டியல் தயாரித்தல்**

இம்முறை சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். வினாப்பத்திரம் I இற்குரிய புள்ளிப்பட்டியலில் "வினாப்பத்திரம் I" என்ற நிரலில் பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும். பகுதிப்புள்ளிகளை உள்ளடக்கி "வினாப்பத்திரம் II" எனும் நிரலில் வினாப்பத்திரம் II இற்குரிய இறுதிப்புள்ளியை பதிய வேண்டும். 51 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதிந்து எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.

ooo

# க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2018

## 43 - கிறிஸ்தவம்

## புள்ளி வழங்கும் விதம்

**43 - கிறிஸ்தவம்**

**பத்திரம் II**

இது இரண்டு பகுதிகளைக் கொண்டது. பகுதி ஒன்றின் மூன்றுவினாக்களில் ஏதேனும் இரண்டு வினாக்களுக்கும் பகுதி இரண்டில் உள்ள ஐந்து வினாக்களில் ஏதேனும் மூன்று வினாக்களுக்குமாக **மொத்தம் ஐந்து வினாக்களுக்கு** பரீட்சார்த்திகள் விடை எழுத வேண்டும். ஒரு வினாவுக்கு 20 புள்ளிகள் வீதம் **பத்திரம் II க்கு மொத்தம் 100 புள்ளிகள்** வழங்கப்படும்.

**பகுதி I**

(1) (i) - 04 புள்ளிகள்
(ii) - 04 புள்ளிகள்
(iii) - 04 புள்ளிகள்
(iv) - 04 புள்ளிகள்
(v) - 04 புள்ளிகள்
**மொத்தம் 20 புள்ளிகள்**

(2) (i) - 04 புள்ளிகள்
(ii) - 04 புள்ளிகள்
(iii) - 04 புள்ளிகள்
(iv) - 04 புள்ளிகள்
(v) - 04 புள்ளிகள்
**மொத்தம் 20 புள்ளிகள்**

(3) (i) - 04 புள்ளிகள்
(ii) - 04 புள்ளிகள்
(iii) - 04 புள்ளிகள்
(iv) - 04 புள்ளிகள்
(v) - 04 புள்ளிகள்
**மொத்தம் 20 புள்ளிகள்**

**பகுதி - II**

(4) (i) - 10 புள்ளிகள்
(ii) - 10 புள்ளிகள்
**மொத்தம் 20 புள்ளிகள்**

(5) (i) - 10 புள்ளிகள்
(ii) - 10 புள்ளிகள்
**மொத்தம் 20 புள்ளிகள்**

(6) (i) - 10 புள்ளிகள்
(ii) - 10 புள்ளிகள்
**மொத்தம் 20 புள்ளிகள்**

(7) (i) - 10 புள்ளிகள்
(ii) - 10 புள்ளிகள்
**மொத்தம் 20 புள்ளிகள்**

(8) (i) - 10 புள்ளிகள்
(ii) - 10 புள்ளிகள்
**மொத்தம் 20 புள்ளிகள்**

**இறுதிப் புள்ளி கணக்கிடல்**

பத்திரம் I க்கு 100 புள்ளிகள்

பத்திரம் II க்கு 100 புள்ளிகள்

∴ **இறுதிப் புள்ளிகள் 200/2 = 100 புள்ளிகள்**

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]
ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் Sri Lanka Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka

அධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2018 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப் பரீட்சை, 2018 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2018

06.08.2018 / 0830 - 1030

| | | |
|---|---|---|
| ක්‍රිස්තියානි ධර්මය I<br>கிறிஸ்தவம் I<br>Christianity I | 43 T I | පැය දෙකයි<br>இரண்டு மணித்தியாலம்<br>Two hours |

**அறிவுறுத்தல்கள் :**

* எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
* விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது சுட்டெண்ணை எழுதுக.
* விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
* 1 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து, அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (×) இடுவதன் மூலம் காட்டுக.

1. பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பைக் குறிக்கும் பெயர்,
   (1) செப்துவாஜின்த் (2) பிப்லியோன் (3) வல்கேட்
   (4) மசோரா (5) கும்ரான்

2. இஸ்ரயேல் வரலாற்றில் வெளிப்படுத்தப்பட்ட இறைச்செயற்பாடுகள் கிறிஸ்துவின் மூலம் முழுமையடைந்த விதத்தினைக் குறிப்பிடும் திருமுகம் எது?
   (1) எபிரேயர் (2) I திமோத்தேயு (3) I கொரிந்தியர்
   (4) II திமோத்தேயு (5) II கொரிந்தியர்

3. திருவிவிலியத்தில் இறை ஏவுதல் பெற்ற எழுத்தாளர் எழுதியவற்றின் மூலம், இறை வெளிப்பாட்டைப் பெறுவோர்,
   (1) இறை மக்கள் ஆவர். (2) கிறிஸ்தவ விசுவாசிகள் ஆவர்.
   (3) திருவிவிலிய அறிஞர்கள் ஆவர். (4) திருவிவிலிய வாசகர்கள் ஆவர்.
   (5) திருவிவிலியத்தைக் கற்பவர்கள் ஆவர்.

4. இயேசுவின் வாழ்க்கையோடு இணைந்து காணப்பட்ட பிரதேசமாகிய கலிலேயாவின் வடக்கு எல்லை,
   (1) கார்மேல் மலைத்தொடர் ஆகும். (2) லெபனான் மலைத்தொடர் ஆகும்.
   (3) எசட்றோலோன் பள்ளத்தாக்கு ஆகும். (4) கப்பர்நாகும் ஆகும்.
   (5) சீனாய் உபகண்டம் ஆகும்.

5. கிரேக்கப் பேரரசு காலத்தில் பலஸ்தீனாவில் யூதமதத்தை இழிவுபடுத்துவதற்காக, வேற்று மத வழிபாடுகளைப் பின்பற்றுமாறு யூத மக்களை வற்புறுத்தியவர் யார்?
   (1) மகா அலெக்சாண்டர் ஆவார். (2) பொம்பே அரசன் ஆவார்.
   (3) அந்தியோக்கு எப்பிபானஸ் ஆவார். (4) மகா ஏரோது ஆவார்.
   (5) மட்றி ஆவார்.

6. பஞ்சாகமத்தில் அடங்கியுள்ள மரபுகள் நான்கின் பண்புகள் சில கீழே தரப்பட்டுள்ளன.
A - ஏனைய படைப்புகளின் மீதான அதிகாரத்தை மனிதனுக்குப் பெற்றுக்கொடுத்தல்
B - உரைகளாகவும் அறிவுரைகளாகவும் எழுதப்பட்டிருத்தல்
C - தண்டம் செலுத்துவதால் பாவமன்னிப்பு கிடைத்தல்
D - அதிக கலையாற்றலைக் கொண்ட உயர்வான எபிரேய மொழி உள்ளடங்கியிருத்தல்
E - கி.மு 587 இன் பின்னர் ஆரம்பிக்கப்பட்டமை
இவற்றில் குருக்கள் மரபிற்குரிய பண்புகள் அடங்கிய தெரிவு எது?
(1) A, B, C. (2) B, C, D. (3) A, D, E. (4) A, C, E. (5) B, D, E.

7. திருவிவிலிய அறிஞர்கள் கூறுவதன்படி ஐந்நூல் உருவாக்கத்தின் அடிப்படையாக அமைந்தது,
(1) மோசேயின் படிப்பினைகளாகும்.
(2) சீனாய் உடன்படிக்கையாகும்.
(3) விடுதலைப் பயணத்தின்போது கிடைத்த மீட்பின் அனுபவங்களாகும்.
(4) குலமுதுவர்களின் காலத்தில் இடம்பெற்ற ஒருசில நிகழ்வுகளாகும்.
(5) வரலாற்றுக்கு முற்பட்ட கால நிகழ்வுகளாகும்.

8. திருவிவிலிய அறிஞர்கள் எடுத்துக்காட்டுவதன்படி பத்து பெரும் துன்பங்களின் கதைக்குப் பின்னணியாக அமைந்தது எது?
(1) விடுதலைப் பயண அனுபவங்கள்
(2) மோசேயால் எழுதப்பட்ட சில நிகழ்வுகள்
(3) பஞ்சாகம எழுத்தாளரின் அனுபவங்கள்
(4) யூத பாஸ்கா பற்றி எழுதப்பட்டுள்ள விடயங்கள்
(5) முற்காலத்தில் நிகழ்ந்த சில தொல்லைகள் அழிவுகள் பற்றிய வரலாற்று அனுபவங்கள்

9. இறைவனால் மோசேயும் ஆரோனும் அனுப்பப்பட்டனர் என்பதற்குச் சான்றாகப் பார்வோன் முன்னிலையில் இடம்பெற்ற சம்பவம்,
(1) உவர்ப்பு நீரூற்றிலிருந்து நீர் பெற்றுக்கொடுத்தமை
(2) தலைமகன் சாவு
(3) செங்கடலைக் கடந்தமை
(4) கோல், பாம்பாக மாறியமை
(5) தண்ணீர் இரத்தமாகியமை

10. இறைவாக்கினரின் அழைப்பின்படி, எசாயா இறைவாக்கினரின் அழைப்பில் ‘அனுப்பப்படுதல்’ எவ்வாறு இடம்பெற்றது?
(1) “அனைத்தையும் அவர்களிடம் சொல்” என்றாகும்.
(2) மக்களுக்கு கொடுத்த செய்தி மூலமாகும்.
(3) “கிளர்ச்சி செய்யும் இனத்தாரிடையே நான் உன்னை அனுப்புகிறேன்” என்றாகும்.
(4) “நாடுகடத்தப்பட்ட மக்களிடம் போ” என்றாகும்.
(5) “எனது மக்களிடம் போ” என்றாகும்.

11. மெசியாவின் வருகையோடு கி.மு. 922 இல் இரண்டாகப் பிரிந்த இஸ்ரேல் அரசு மீண்டும் ஒன்றுபட்ட அரசாகும் என்பதை அறிவித்த இறைவாக்கினர் யார்?
(1) எசாயா (2) செக்கரியா (3) ஒசேயா (4) மீக்கா (5) ஆமோஸ்

12. மெசியா எப்படியானவராக இருப்பார் என்பது பற்றி எசாயாவின் பாடல்கள் சிலவற்றில் கூறப்பட்டுள்ளது. இவற்றுள் தாய் வயிற்றில் உருவாகும்போதே துன்புறும் ஊழியனை அழைத்ததாக எப்பாடலில் கூறப்படுகிறது?
(1) முதலாவது பாடலில் ஆகும்.
(2) இரண்டாவது பாடலில் ஆகும்.
(3) மூன்றாவது பாடலில் ஆகும்.
(4) நான்காவது பாடலில் ஆகும்.
(5) ஐந்தாவது பாடலில் ஆகும்.

13. எசாயா 5:1-7 வரை பகுதியில் குறிப்பிடப்படும் "திராட்சைத் தோட்டமும் அதனை வளர்ப்போரும்" பற்றிய பாடலுக்கு அமைய திராட்சைத் தோட்டம், நட்ட கன்று, அன்பர் என்பவற்றால் அடையாளப்படுத்தப்படுவன முறையே யாவை?
(1) யூத மக்கள், இஸ்ரயேல் குடும்பத்தார், இறைவன்
(2) இஸ்ரயேல் குடும்பத்தார், யூத மக்கள், இறைவன்
(3) உலக மாந்தர், இஸ்ரயேல் குடும்பத்தார், இறைவன்
(4) இஸ்ரயேல் குடும்பத்தார், யூத மக்கள், கிறிஸ்துநாதர்
(5) உலக மாந்தர், தேர்ந்துகொள்ளப்பட்ட மக்கள், கிறிஸ்துநாதர்

14. எருசலேம் தேவாலயத்தைக் கட்டுவதற்கு முன்னர் யூதமக்கள் உடன்படிக்கைப் பேழையின் அருகில் வழிபாட்டுச் சம்பிரதாயங்களை நிகழ்த்திய இடம்,
(1) சினக்கொக் ஆகும்.
(2) சீனாய் மலையடிவாரம் ஆகும்.
(3) கூடாரமொன்று ஆகும்.
(4) செபக்கூடம் ஆகும்.
(5) பெயர்சேபாவின் விசேட பலிபீடம் ஆகும்.

15. தூய மாற்கு தமது நற்செய்தியை எழுதுவதற்காக விடயங்களைப் பெற்றுக்கொண்ட பிரதான மூலாதாரம் எது?
(1) தூய பவுலின் போதனைகளும் படிப்பினைகளுமாகும்.
(2) தூய பேதுருவின் போதனைகளும் படிப்பினைகளுமாகும்.
(3) உரோமையில் பெற்றுக்கொண்ட விடயங்களாகும்.
(4) அருங்குறிகள் தொடர்பாக எழுதப்பட்ட ஆக்கங்களாகும்.
(5) தூய மாற்குவின் கிறிஸ்தவ சமூகத்தின் அனுபவங்களாகும்.

16. தூய மத்தேயு நற்செய்தியில் காணக்கிடைக்கும் வசனங்களில் மத்தேயுவுக்கு மாத்திரம் உரிய வசனங்கள்
(1) 10 % ஆகும். (2) 20 % ஆகும். (3) 30 % ஆகும். (4) 40 % ஆகும். (5) 50 % ஆகும்.

17. ஒத்தமை நற்செய்திகளின் ஆசிரியத்துவத்தையும் அவை எழுதப்பட்ட காலத்தையும் பற்றிய தீர்மானமாகிய 'இரு மூலக்கொள்கை' 1833 இல் முன்வைக்கப்பட்டது,
(1) ஜே. உவெய்ஸ் என்பவரால் ஆகும்.
(2) வெல்ஹவுசன் என்பவரால் ஆகும்.
(3) வில்ஹெல்ம ரீட் என்பவரால் ஆகும்.
(4) ஜே. ஹோல்ஸ்மன் என்பவரால் ஆகும்.
(5) புல்மான் என்பவரால் ஆகும்.

18. இறை ஆட்சியை, ஓர் அடையாளமாகக் காட்டும் உவமை,
(1) புதையல் தொடர்பான உவமையாகும்.
(2) முத்து தொடர்பான உவமையாகும்.
(3) வலை தொடர்பான உவமையாகும்.
(4) கடுகு தொடர்பான உவமையாகும்.
(5) தகரையும் கோதுமையும் தொடர்பான உவமையாகும்.

**19.** முடக்குவாதக்காரனைக் குணமாக்கிய புதுமையின் போது இறைவன் உடல் நலத்தைப் போன்று ஆன்மீக நலத்தையும் அளிக்கிறார் என இயேசு யாருக்குக் கூறினார்?
(1) மறைநூல் அறிஞர்களுக்காகும்.
(2) பரிசேயருக்காகும்.
(3) முடக்குவாதக்காரனின் உறவினர்களுக்காகும்.
(4) மற்றவர்களில் தங்கி வாழ்பவர்களுக்காகும்.
(5) அங்கு கூடியிருந்த அனைவருக்குமாகும்.

**20.** முதலாவது நூற்றாண்டின் இறுதிக் காலப்பகுதியில் திருச்சபை முகங்கொடுக்க நேரிட்ட பிரச்சினைகள் இரண்டாகும். அவற்றில் ஒன்று,
(1) கிறிஸ்தவம், உலகம் முடியும் வரையான மறை ஆகும்.
(2) ஆரிய பேதகம் ஆகும்.
(3) இறந்தோர் மீண்டும் உயிர்தெழுதல் பற்றிய நம்பிக்கையின்மை ஆகும்.
(4) திருச்சபையை யூதமதத்தின் ஒரு பிரிவு என ஏற்றுக்கொண்டமை ஆகும்.
(5) திருத்தொண்டர்களின் இறப்பு ஆகும்.

**21.** இயேசுவின் பாடுகள், மரணம் என்பவற்றில் உள்ளடங்கியுள்ள பிரதானமான சம்பவங்கள் வழியாக தூய மாற்கு இயேசுவைப் பற்றி வெளிப்படுத்தும் முக்கிய விடயம், அவர்
(1) மெசியா என்பதாகும்.
(2) ஒரு வீரன் என்பதாகும்.
(3) இறைமகன் என்பதாகும்.
(4) குற்றமற்ற ஒருவர் என்பதாகும்.
(5) யூதரின் அரசன் என்பதாகும்.

**22.** "அந்நாளில் நண்பகல் வேளையில் சூரியனை மறையச்செய்யவும்.... " என்று இயேசுவின் மரணத்தைப் பற்றி முன்னறிவித்த இறைவாக்கினர் யார்?
(1) எசாயா (2) மீக்கா (3) செக்கரியா (4) ஆமோஸ் (5) எரேமியா

**23.** தூய மத்தேயு நற்செய்தியின் படி அரிமத்தியா யோசேப்பு என்பவர்,
(1) இயேசுவைப் பின்பற்றிய ஒரு நபராவார்.
(2) செனட்றீன் சபையின் ஓர் அங்கத்தவராவார்.
(3) நித்திய வாழ்வு பற்றிக் கேட்ட பரிசேயராவார்.
(4) இலாசரை உயிர்ப்பித்தது பற்றிய ஓர் சாட்சியாளராவார்.
(5) சிலுவையைச் சுமந்து செல்ல இயேசுவுக்கு உதவியவராவார்.

**24.** ஒரு சந்தர்ப்பத்தில் இயேசு தலைமைக் குரு முன்னிலையில் நடைபெற்ற விசாரணையின்போது மௌனமாக இருந்ததன் மூலம் எடுத்துக்காட்டிய விடயம்,
(1) தாம் குற்றமற்றவர் என்பதை நிருபித்தலாகும்.
(2) தனது அதிகாரத்தையும் உண்மையையும் காட்டுதலாகும்.
(3) தாம் இலௌகீக அதிகாரத்தினாலன்றி இறைவனின் வல்லமையால் நிறைந்து இருப்பதைக் காட்டுதலாகும்.
(4) தலைமைக் குருவை விட தாம் மேலானவர் என்பதைக் காட்டுதலாகும்.
(5) தாம் குருக்களின் அரசன் என்பதைக் காட்டுதலாகும்.

25. தூய யோவான் 7:37-39 இன் படி இயேசு மாட்சிமைப்படுத்தப்பட்ட பின்பு ஆவியானவரை வழங்குவதாக உறுதியளிக்கிறார். அதன்படி தூய ஆவியைப் பெறுபவர்கள்,
(1) அனைத்து உலக மாந்தரும் ஆவர்.
(2) இயேசுவின் சீடர்கள் ஆவர்.
(3) இயேசுவிடம் வருபவர்கள் ஆவர்.
(4) விசுவாசத்துடன் வாழ்பவர்கள் ஆவர்.
(5) அன்புடன் வாழ்பவர்கள் ஆவர்.

26. தூய பவுல் எருசலேமில் புறவினத்தாரிடம் ஒப்படைக்கப்படுவார் என்பதைத் தூய ஆவியின் வழிக்காட்டலின் மூலம் வெளிப்படுத்திய இறைவாக்கினர் யார்?
(1) சிமியோன்
(2) அனனியஸ்
(3) அகவு
(4) பாப்பஸ்
(5) நாத்தன்

27. பாஸ்கு விழா கொண்டாடுவது பற்றிய உரிய திகதியொன்றை உறுதி செய்த பொதுச் சங்கம் எது?
(1) திரிதெந்தீன்
(2) இரண்டாம் வத்திக்கான்
(3) எபேசு
(4) கல்சிடோன்
(5) நிசேயா

28. இயுத்திகசின் கருத்து, ஒரு பேதகம் என எடுத்துக்காட்டிய ஆயர்,
(1) தூய அத்தனாசியார்
(2) தூய சிறில்
(3) தூய ஒரிஜன்
(4) தூய பிலேவியன்
(5) தூய எவ்சேபியஸ்

29. கிறிஸ்தவ சமயம் உயர்ந்தது என்பதை எடுத்துக்காட்ட 'அப்போலோஜஸ்டிக்' என்னும் நூலை ஆக்கியவர்
(1) தூய ஜஸ்டின்
(2) தூய தேர்த்தூலியன்
(3) தூய ஒறிஜன்
(4) தூய அகஸ்டின்
(5) தூய அத்தனாசியார்

30. கி.பி 1073 இல், 'VII ஆவது கிறகோரி' என்னும் பெயரில் திருத்தந்தையாக நியமிக்கப்பட்டவர் யார்?
(1) கருதினால் வொல்சே
(2) கருதினால் வின்பிறீட்
(3) கருதினால் மெதோடியஸ்
(4) கருதினால் டேமியானோ
(5) கருதினால் ஹில்டேபிராண்ட்

31. ஆண்டவரின் இறுதி இரவுணவு 'தனி நினைவுகூரல் மட்டுமே' எனக் கூறியவர்
(1) மாட்டின் லூத்தர்
(2) யோண் கல்வின்
(3) சுவிங்லி
(4) ஜோண் பெசர்
(5) தோமஸ் மூர்

32. சீர்திருத்த சபையினரால்கூடப் புகழப்பட்ட தூய பீட்டர் கனீசியஸ் அவர்களால் எழுதப்பட்ட நூல் எது?
(1) கத்தோலிக்க விசுவாசத்தின் மறைக்கல்வி
(2) ஆன்மீக பயிற்சி
(3) திரிதெந்தீன் மறைக்கல்வி
(4) நிறைவாழ்வின் வழி
(5) கிறிஸ்தவ மறை ஒற்றுமை

33. பிரான்சு, ருசிய யுத்தம் ஏற்பட்டமையினால் இடைநிறுத்தப்பட்ட திருச்சங்கம் எது?
(1) திரிதெந்தீனு
(2) புளோரன்ஸ்
(3) முதலாம் வத்திக்கான்
(4) பரீஸ்
(5) இரண்டாம் வத்திக்கான்

**34.** 1929 இல் இத்தாலி அரசுடன் செய்துகொண்ட இலாத்திரன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டவர்,
(1) திருத்தந்தை XXIII ஆம் அருளப்பர் (2) திருத்தந்தை VI ஆம் பத்திநாதர்
(3) திருத்தந்தை VII ஆம் பத்திநாதர் (4) திருத்தந்தை XIII ஆம் சிங்கராயர்
(5) திருத்தந்தை XI ஆம் பத்திநாதர்

**35.** 13ஆம் நூற்றாண்டில் உலகில் காணப்பட்ட முக்கிய பல்கலைக்கழகங்கள் நான்கில் ஒன்றாகிய சலமன்கா பல்கலைக்கழகத்தை ஆரம்பித்தவர் யார்?
(1) IXஆம் அல்போன்ஸ் அரசன் (2) திருத்தந்தை IVஆம் அலெக்சாண்டர்
(3) சாள்ஸ்மென் அரசன் (4) IV ஆம் அலெக்சாண்டர் அரசன்
(5) மகா அல்பிரட் அரசன்

**36.** உரோமையில் தூய பேதுரு போராலயத்தின் மக்கள் அமரும் ஆசனங்களுக்கு மேலுள்ள வெண்கல மேற்பந்தலை அமைத்தவர்
(1) லியோனாடோ டா வின்ஸி (2) பிரா அஞ்சலிக்கோ
(3) இறபாயெல் சான்ஸியோ (4) லோறன்சோ பர்னினி
(5) மைக்கல் அஞ்சலோ

**37.** போர்த்துக்கேயரின் உதவியை நாடி கிறிஸ்தவ மதத்தைத் தழுவியபோதும், சீதாவாக்கையில் இராஜசிங்க மன்னனின் ஆக்கிரமிப்பு நிறுத்தப்பட்டவுடன் சமயத்தை மறுதலித்த சிங்கள இளவரசன் யார்?
(1) கரலியத்தே பண்டார (2) தொன் யுவான் யமசிங்க
(3) வீரசுந்தர பண்டார (4) ஜெயவீர பண்டார
(5) பிலிப் யமசிங்க

**38.** 1903 இல் காலியில் ஆயராக இருந்த மேன்மை தங்கிய ஜோசப் வான்றீன் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட உள்நாட்டு துறவற சபை எது?
(1) தூதர்களின் சகோதரிகள் சபை (2) மரியாயின் பிரான்சிஸ்கன் மறைபரப்பு சபை
(3) ஏழைகளின் சிறிய சகோதரிகள் சபை (4) அப்போஸ்தலிக்க கார்மேல் சகோதரிகள் சபை
(5) திருச்சிலுவை துறவற சபை

**39.** பின்வருவன காலனித்துவ ஆட்சிக்காலத்தில் இலங்கையின் கல்வித்துறையில் காணப்பட்ட சிலவகைப் பாடசாலைகள் ஆகும்.
A - கோயில்பற்றுப் பாடசாலை
B - மிஷனரிப் பாடசாலை
C - குருமடங்கள் (செமனேரி)
D - அநாதைகள் இல்லம்
E - பிரிவெனாப் பாடசாலைகள்
இவற்றில் ஒல்லாந்தர் காலத்தில் காணப்பட்ட பாடசாலைகளை மாத்திரம் கொண்ட தெரிவு யாது?
(1) A, B, C (2) A, C, D (3) A, C, E
(4) B, C, D (5) C, D, E

**40.** 'பாதுகாவலன்' என்பது,
(1) இலங்கையில் பழமைவாய்ந்த தமிழ் கிறிஸ்தவ சஞ்சிகையாகும்.
(2) இலங்கையில் மிகப் பழமைவாய்ந்த சஞ்சிகையாகும்.
(3) இலங்கையில் பழமைவாய்ந்த பத்திரிகையாகும்.
(4) முதலாவது தமிழ் கிறிஸ்தவ நாட்டார் எழுத்தாக்கமாகும்.
(5) இலங்கையின் முதலாவது கத்தோலிக்க தமிழ் சஞ்சிகையாகும்.

**41.** திருவிவிலியத்தின் இலகுவான சம்பவங்களைச் சித்திரமாக வரைந்தவரும், நீர்கொழும்பில் பெரிய தெருவில் அமைந்துள்ள புனித மரியாள் ஆலயத்தின் அடிக்கூரையில் ஓவியங்களை வரைந்தவருமான பௌத்த ஓவியக் கலைஞர்

(1) என். எஸ். கொடமான
(2) பெசில் நவரத்ன
(3) போல் நவரத்ன
(4) முகந்திரம் முதியன்சே
(5) சோலியஸ் மெண்டிஸ்

**42.** ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இலங்கையில் கடுமையான கொலரா நோய் காணப்பட்ட வேளையில் நோயளிகளைப் பராமரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தபோது, அதே நோயால் பீடிக்கப்பட்டு இறைபதமடைந்தவர் அமலமரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த

(1) அருட்பணி ஜெரமியோ ஆவார்.
(2) அருட்பணி நோபிலே ஆவார்.
(3) அருட்பணி ஜோசப் கரவல்லோ ஆவார்.
(4) அருட்பணி பியரே பர்குவின் ஆவார்.
(5) அருட்பணி பிலிக்ஸ் அலெக்சாண்டர் ஆவார்.

**43.** திருத்தூதர் காலத்தில் பாவங்களுக்கு மன்னிப்பைப் பெறுவதற்காக இதயபூர்வமான மனஸ்தாபத்தைப் போன்று, இன்னும் தேவைப்பட்டது,

(1) தாம் செய்த பாவங்களை உச்சரித்தலாகும்.
(2) ஆன்மீக ஆயத்தமாகும்.
(3) ஒரு சந்தி அனுசரித்தலாகும்.
(4) நெற்றியில் விபூதி அணிதலாகும்.
(5) கைகளைச் சுத்தம் செய்தலாகும்.

**44.** கீழைத்தேய கத்தோலிக்க வழிபாடுகளின் முக்கிய பண்பு

(1) கம்பீரத்தன்மை
(2) அடக்கமாக இருத்தல்
(3) பண்பாட்டுமயமாக்கப்பட்டிருத்தல்
(4) அறிவுக்கு எட்டும் தன்மை
(5) உயர் தரமானதன்மை

**45.** "மாபெரும் மீட்பின் செயற்பாட்டில் நேரடியாகத் தொடர்புடைய ஒன்றியம்" என திருச்சபையை அறிமுகப்படுத்தியவர்,

(1) பிவ்ரான் ஆவார்.
(2) தூய சிப்பிரியான் ஆவார்
(3) தூய தோமஸ் அக்குவைனாஸ் ஆவார்.
(4) காள் ரானர் ஆவார்.
(5) தூய அகுஸ்தீனார் ஆவார்.

**46.** நற்கருணைக்குச் செய்யும் வணக்க ஆராதனைகளைப் போன்று அதனுடன் தொடர்புடைய பல்வேறு பக்தி முயற்சிகளில் கவனம் செலுத்தியுள்ள சுற்றுமடல் எது?

(1) மிஸ்றேரியும் பீதெயி
(2) எக்லேசியா த எயுக்கரசிதியா
(3) லூமென் ஜென்சியும்
(4) சக்கிரமெண்டும் யுனிடாடிஸ்
(5) மிடியாதோர் தேயி

**47.** தூய லூக்காவும் தூய பவுலும் கூறும் "இயேசு, அப்பம், கிண்ணம் என்பவற்றின் மீது நன்றி கூறினார்" என்பது எம்மரபைச் சேர்ந்தது?

(1) அலெக்சாந்திரியா
(2) பலஸ்தீனம்
(3) அம்புறோசியான்
(4) கலிக்கான்
(5) செல்திக்

**48.** "மனிதனின் உன்னத தன்மை நிலைத்திருப்பது, அவனுக்கே தனித்துவமான மனச்சான்றிலாகும்" என மனிதனின் மாண்பைப் பற்றிக் குறிப்பிடுவது,

(1) கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வியாகும்.
(2) கத்தோலிக்க திருச்சபையின் பெரிய குறிப்பிடமாகும்.
(3) இன்றைய உலகின் திருச்சபை என்னும் வெளியீடாகும்.
(4) கிறிஸ்தவ திருச்சபை ஒன்றிப்பு என்னும் வெளியீடாகும்.
(5) அவனியில் அமைதி என்னும் சுற்றுமடலாகும்.

**49.** பப்டிஸ்ட் திருச்சபை இலங்கையில் தம் பணியை ஆரம்பித்த பிரதேசம் எது?

(1) காலி (2) கிராண்பாஸ் (3) குருணாகல்
(4) முகத்துவாரம் (5) கண்டி

**50.** கிறிஸ்தவம் அல்லாத பிறசமயங்கள் பற்றிய திருச்சபையின் கண்ணோட்டமும் மனப்பாங்கும் தொடர்பாகக் கவனம் செலுத்துவதற்காக செயலகமொன்றை நிறுவுவதற்கு முன்நின்றவர்

(1) திருத்தந்தை XI ஆம் சிங்கராயர்
(2) திருத்தந்தை XIII ஆம் சிங்கராயர்
(3) திருத்தந்தை II ஆம் அருளப்பர் சின்னப்பர்
(4) திருத்தந்தை VI ஆம் சின்னப்பர்
(5) திருத்தந்தை XXIII ஆம் அருளப்பர்

* * *

## ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
## இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

### අ.පො.ස. (උ.පෙළ) විභාගය/ க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2018

විෂයය අංකය / பாட இலக்கம்: **43**

විෂයය / பாடம்: **கிறிஸ்தவம்**

### ලකුණු දීමේ පටිපාටිය/புள்ளி வழங்கும் திட்டம்

### I පත්‍රය/பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | 1 | 11. | 4 | 21. | 5 | 31. | 3 | 41. | 1 |
| 02. | 1 | 12. | 2 | 22. | 4 | 32. | 1 | 42. | 5 |
| 03. | 4 | 13. | 2 | 23. | 1 | 33. | 3 | 43. | 1 |
| 04. | 2 | 14. | 3 | 24. | 2 | 34. | 5 | 44. | 3 |
| 05. | 3 | 15. | 2 | 25. | 3 | 35. | 1 | 45. | 5 |
| 06. | 4 | 16. | 3 | 26. | 3 | 36. | 4 | 46. | 5 |
| 07. | 3 | 17. | 1 | 27. | 5 | 37. | 4 | 47. | 2 |
| 08. | 5 | 18. | 4 | 28. | 4 | 38. | 1 | 48. | 3 |
| 09. | 4 | 19. | 2 | 29. | 2 | 39. | 2 | 49. | 2 |
| 10. | 2 | 20. | 1 | 30. | 5 | 40. | 5 | 50. | 4 |

✪ විශේෂ උපදෙස්/ விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට/ ஒரு சரியான விடைக்கு 02 ලකුණු බැගින්/புள்ளி வீதம்

මුළු ලකුණු/மொத்தப் புள்ளிகள் 2 × 50 = 100

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2018 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப் பரீட்சை, 2018 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2018

ක්‍රිස්තියානි ධර්මය II
கிறிஸ்தவம் II
Christianity II

**43 T II**

07.08.2018 / 0830 - 1140

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல்கள்:**

* பகுதி **I** இல் எவையேனும் **இரண்டு** வினாக்களையும், பகுதி **II** இல் எவையேனும் **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

1. (i) திருவிவிலியத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பிரதான காரணிகள் **நான்கையும்** எழுதுக.

(ii) இஸ்ராயேலின் மீட்பின் வரலாற்றிலே இறைவாக்கினர் பற்றிய எண்ணக்கருவின் வளர்ச்சியினைக் காணக்கூடியதாக இருப்பதை உறுதிப்படுத்த **நான்கு** காரணிகள் தருக.

(iii) தூய பவுலின் முதலாவது மறைத்தூதுப் பயணத்தில் லிஸ்திராவில் இடம்பெற்ற முக்கிய சம்பவங்கள் **நான்கு** எழுதுக.

(iv) மத்திய காலத்தில் திருவிவிலியத்தைக் கற்கும்போது பயன்படுத்தப்பட்ட **நான்கு** வித விளக்கங்களையும் எழுதுக.

(v) ஒல்லாந்தர் காலத்தில் இலங்கையில் பணியாற்றிய பிலிப்புஸ் பல்தேவுஸ் அடிகளாரால் நிறைவேற்றப்பட்ட பணிகள் **நான்கினை** எழுதுக.

(4 × 5 = 20 புள்ளிகள்)

2. (i) விடுதலைப் பயண நூல் 15:1-21 வரையான பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மோசேயின் வெற்றிப்பாடலில் அடங்கியுள்ள பிரதான விடயங்கள் **நான்கினையும்** எழுதுக.

(ii) புதுமைகள் என்றால் என்னவென விளக்கும் காரணிகள் **நான்கைக்** குறிப்பிடுக.

(iii) திருத்தந்தை XIIIஆம் சிங்கராயர், 1878-1903 காலப்பகுதியில் தாம் எழுதிய சுற்றுமடல்களுக்குக் கருப்பொருளாகக் கொண்ட விடயங்கள் **நான்கினை** எழுதுக.

(iv) ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் உதயமான முழுமையான சமய சுதந்திரத்தின் மூலம் பயனைப் பெற்றுக்கொள்வதற்கு இலங்கையில் ஒறத்தோரியன் சபைக் குருக்கள் செயற்பட்ட விதத்தை எடுத்துக்காட்டுவதற்கு **நான்கு** காரணிகளைக் குறிப்பிடுக.

(v) பிற்காலத்தில் திருவழிபாட்டிற்கு உரோமைக் கலாசார மூலங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற செல்வாக்குகள் **நான்கினைக்** குறிப்பிடுக.

(4 × 5 = 20 புள்ளிகள்)

3. (i) எசாயா 11:1-9இன் படி அமைதியின் அரசின் (நீதியுள்ள அரசரின்) பண்புகள் **நான்கினைக்** குறிப்பிடுக.

(ii) கி.பி 431 இல் கூட்டப்பட்ட எபேசு பொதுச்சங்கத்தில் நெஸ்தோரிய பேதகத்தினைக் கண்டனம் செய்து எடுக்கப்பட்ட தீர்மானங்கள் **நான்கினையும்** குறிப்பிடுக.

(iii) அண்மைக்காலத்தில் உரோமையில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகளின்போது கண்டுபிடிக்கப்பட்ட டொமிற்றில்லாவின் சுரங்கக் கல்லறையிலிருந்து கிடைக்கப்பெற்ற கிறிஸ்தவ சுவர்ச் சித்திரங்களுக்குக் கருப்பொருளாக அமைந்த திருவிவிலியக் கதைகள் **நான்கினைப்** பெயரிடுக.

(iv) பின்வரும் ஒவ்வொரு துறவற சபையையும் ஆரம்பித்தவர்களைப் பெயரிடுக.

(அ) செல்டிக்
(ஆ) கமல்டோலெஸ்
(இ) கார்த்தூஷியன்
(ஈ) சிஸ்டர்சீயன்

(v) இலங்கைத் திருச்சபையின் சமயங்களுடனான உரையாடலின் பெறுபேறுகள் **நான்கு** எழுதுக.

(4 × 5 = 20 புள்ளிகள்)

## பகுதி II

4. (i) சமநோக்கு நற்செய்தியின் ஆசிரியத்துவம், அது எழுதப்பட்ட காலம் என்பன பற்றி முன்வைக்கப்பட்டுள்ள முடிவுகள் **ஐந்தினைச்** சுருக்கமாக விவரிக்குக. (10 புள்ளிகள்)

(ii) கிறிஸ்துநாதரின் 'மலைப்பொழிவு' உமது கிறிஸ்தவ வாழ்க்கைக்கு எவ்வாறு முக்கியத்துவமுடையதாய் அமையும் என்பதை அதன் நோக்கத்துடன் தொடர்புபடுத்தி **ஐந்து** உதாரணங்கள் தந்து விளக்குக. (10 புள்ளிகள்)

5. (i) "அன்று திருச்சபை ஐரோப்பாவில் கல்வியை முன்னேற்றுவதற்கு எடுத்த முயற்சி ஐரோப்பாவிற்கு மட்டுமன்றி முழு உலகத்திற்கும் முக்கியத்துவம் வாய்ந்ததாய் அமைந்தது." இவ்வெளிப்பாட்டிற்கமைய கல்விக்கான கிறிஸ்தவ திருச்சபையின் அர்ப்பணிப்பை **ஐந்து** விடயங்களின் ஊடாக விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) திருச்சபையின் ஆரம்பகாலத்தில் கிறிஸ்தவர்களுக்கும் யூதர்களுக்கும் இடையேயான மோதல்களுக்கு ஏதுவான காரணிகளைச் சுருக்கமாக விளக்கி, இலங்கையில் மதங்களுக்கிடையேயான ஒற்றுமையை வளர்ப்பதற்கான ஆலோசனைகள் **ஐந்தினை** விவரிக்குக. (10 புள்ளிகள்)

6. (i) போர்த்துக்கேயர் காலத்தில் இலங்கைக்கு வருகைதந்த மறைப்போதகர்கள் மூலம் நிறைவேற்றப்பட்ட பணிகளை **ஐந்து** காரணிகள் ஊடாக விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) மனிதனின் மாண்பு பற்றிக் கத்தோலிக்க திருச்சபை மறைக் கல்வியில் குறிப்பிடப்படும் படிப்பினைகளை உமது வாழ்க்கையுடன் தொடர்புபடுத்தி **ஐந்து** காரணிகளின் ஊடாக விளக்குக. (10 புள்ளிகள்)

7. (i) தூய யோசப்வாஸ் அடிகளார் ஆற்றிய இரக்கப் பணிகள் **ஐந்தினைக்** குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இலங்கைக்கு வருகை தந்த சில்வெஸ்டர் பெனடிக்ற் சபை மறைத்தூதுவர்களின் பணி தொடர்பான **ஐந்து** விடயங்களைக் குறிப்பிட்டு விவரிக்குக. (10 புள்ளிகள்)

8. (i) அருட்தந்தை கிறிஸ்டோப்பர் பொன்ஜீன் அடிகளாரின் வரலாற்றைச் சுருக்கமாகக் குறிப்பிட்டு, அடிகளார் உதவிபெறும் பாடசாலை (சுவீகரிக்கப்பட்ட பாடசாலை) முறை தொடர்பாக முன்வைத்த ஆலோசனைகள் **ஐந்தினைத்** தருக. (10 புள்ளிகள்)

(ii) இன்றைய இலங்கைக் கிறிஸ்தவ திருச்சபையின் மூலம் நிறைவேற்றப்படும் தூதுப்பணியை மதிப்பிட்டு, கிறிஸ்தவ மாணவராக அதற்கான உமது ஒத்துழைப்புகளை **ஐந்து** காரணிகள் மூலம் விவரிக்குக. (10 புள்ளிகள்)

* * *

# கிறிஸ்தவம் II
# பகுதி I

01. (i) **திருவிவிலியத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பிரதான காரணிகள் நான்கையும் எழுதுக.**

1. இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையிலான நெருங்கிய உறவின் கதை
2. மனித இயல்பு
3. இறைவனின் விருப்பம்
4. மீட்பின் வழிபற்றிய உண்மைகள்
5. விசுவாச வாழ்வை உறுதிப்படுத்துவதற்கு உறுதுணையாகவுள்ளது.
6. இஸ்ரயேல் வரலாற்றில் வெளிப்படுத்தப்பட்ட இறைசெயற்பாடுகள் யாவும் கிறிஸ்துவின் மூலம் முழுமையடைந்த விதம் குறிப்பிடப்பட்டுள்ளது
7. வீழ்ச்சியடைந்த மனிதன் எவ்வாறு மீட்படையலாம் என்பதை எடுத்துகாட்டுகிறது.

(இது போன்ற விடயங்கள் நான்கு எழுதியிருப்பின் 1 இற்கு 1 புள்ளி வீதம் 04 புள்ளிகள் வழங்கவும்.)

(ii) **இஸ்ரயேலின் மீட்பின் வரலாற்றிலே இறைவாக்கினர் பற்றிய எண்ணக்கருவின் வளர்ச்சியினைக் காணக்கூடியதாக இருப்பதை உறுதிப்படுத்த நான்கு காரணிகள் தருக.**

1. எதிர்காலத்தை எடுத்துரைப்பவராகவும்
2. எளிய முறையில் கருத்துக்களை வெளிப்படுத்துபவர்களாகவும் இருப்பர்
3. அரசர்களுக்கு வழிகாட்டுபவர்கள் அல்லது ஆலோசனை கூறுபவர்கள்
4. சமூக நீதிக்காகச் செயற்படுபவர்கள்
5. இறைவனின் செய்தியை எடுத்து சொல்லுபவர்கள்
6. நாடுகடத்தப்பட்ட போது மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தித் தைரியப்படுத்தியவர்கள்

(1 × 4 = 4)

(iii) **தூய பவுலின் முதலாவது மறைத்தூதுப் பயணத்தில் லிஸ்திராவில் இடம்பெற்ற முக்கிய சம்பவங்கள் நான்கு எழுதுக**

1. அங்கு தூய பவுல்தன் உரையைக் கேட்க வந்திருந்த ஒரு முடவனைக் குணமாக்கினார்.
2. "தெய்வங்கள் மனித உருவில் நம்மிடம் இறங்கி வந்திருக்கின்றன என மக்கள் கூட்டம் கூறியது.
3. 'சேயுசு' என்ற கோயில் அர்ச்சகன் காளைகளையும் பூமாலைகளையும் கொணர்ந்து தூயபவுலுக்கும் பர்னபாவிற்கும் பலியிட முயற்சித்தான்.
4. அந்தியோக்கியாவிலிருந்தும் இக்கோனியாவிலிருந்தும் யூதர்கள் வந்து தூய பவுலுக்கும் பர்ணபாவிற்கும் எதிராக மக்களைத் தூண்டி கல்லால் எறிந்து குழப்பம் உண்டாக்கினர்.

(1 × 4 = 4)

(iv) **மத்திய காலத்தில் திருவிவிலியத்தை கற்கும் போது பயன்படுத்தப்பட்ட நான்கு வித விளக்கங்களையும் எழுதுக**

1. உட்கருத்து
2. ஆன்மீகம்
3. ஒழுக்கம்
4. இலக்கியம்

(v) **ஒல்லாந்தர் காலத்தில் இலங்கையில் பணியாற்றிய பிலிப்புஸ் பல்தேவுஸ் அடிகளாரால் நிறைவேற்றக்கட்ட பணிகள் நான்கினை எழுதுக.**

1. ஒல்லாந்தர் காலத்தில் புரட்டஸ்தாந்து சமயபிரசாரத்திற்காக அரும்பாடுபட்டவர்
2. 1658ல் இலங்கை இராணுவத்திற்கு பொறுப்பாக செயலாற்றுவதற்காக வந்தார்
3. காலியில் ஒல்லாந்தர் படையினரின் குருப்பணிக்கு பொறுப்பாக செயலாற்றியதோடு பின்னர் யாழ்ப்பாணத்திலும் பணியாற்றினார்.
4. வினைத்திறனுள்ள பணியை ஆற்றுவதற்காக அவர் சமயநூல்களை தேசிய மொழிகளில் மொழி பெயர்த்து அச்சிடுவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டார்.
5. கடிகிஸ்ட் என்கிற மறை ஆசிரியர்களுக்குப் பயிற்சியை அளித்தார்.
6. எல்லா கோயில்களுக்கும் அண்மையில் பரிக்ஷ் பாடசாலைகளை ஆரம்பித்து அரச உதவியோடு அவற்றினூடாக மறைத்தூதுப்பணியை ஒழுங்கு செய்தார். (1 × 4 = 4)

02)(i) **விடுதலைப்பயண நூல் 15: 1-21 வரையான பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மோசேயின் வெற்றிப் பாடலில் அடங்கியுள்ள பிரதான விடயங்கள் நான்கினையும் எழுதுக.**

1. இறைவனே எமது பலமாக இருக்கின்றார்
2. பாரவோனின் அதிகாரம் தகர்த்தெறியப்பட்டது
3. இறைவனின் வல்லமையின் முன் பார்வோன் அச்சமும் திகிலும் அடைந்தார்
4. இறைவனின் மக்கள் அவருக்கும் புகழச்சிப்பாடல் பாடவேண்டும். (1 × 4 = 4)

(ii) **புதுமைகள் என்றால் என்னவென விளக்கும் காரணிகள் நான்கைக் குறிப்பிடுக.**

1. இவை நம்பிக்கையின் பின்னணியில் செயற்பட்டவை
2. இவற்றின் வழியாக இயேசு தனது சுய இயல்பை வெளிப்படுத்தினார்.
3. இறையாட்சி உருவாவதை நினைவுபடுத்துகிறது.
4. இறைவனின் இரக்கமும் கருணையும் மனிதனுக்கு வெளிப்படுத்தப்படுகிறது.

(இவ்வாறான புதுமைகள் பற்றிய பண்புகள் எழுதப்பட்டிருப்பின் புள்ளி வழங்கவும்) (1 × 4 = 4)

(iii) **திருத்தந்தை 13 ஆம் சிங்கராயர் 1878 - 1903 காலப்பகுதியில் தாம் எழுதிய சுற்று மடல்களுக்குக் கருப்பொருளாகக் கொண்ட விடயங்கள் நான்கினை எழுதுக**

1. விசுவாசமும் அறிவியலும்
2. திருச்சபையும் அரசும்
3. சோசலிசத்தின் ஆபத்துக்கள்
4. திருமணத்தின் புனிதத்தன்மை
5. உரிமையும் அதிகாரமும்
6. தொழிலாளரின் உரிமைகள் (1 × 4 = 4)

(iv) **ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் உதயமான முழுமையான சமய சுதந்திரத்தின் மூலம் பயனைப் பெற்றுக்கொள்வதற்கு இலங்கையில் ஒறத்தோரியன் சபைக் குருக்கள் செற்பட்ட விதத்தை எடுத்துக் காட்டுவதற்கு நான்கு காரணிகளைக் குறிப்பிடுக**

1. சபைக்குச் சொந்தமான சொத்துக்களை மீளவும் கோருதல்
2. சபையின் செயற்பாடுகளின் புனருத்தாரணம்
3. சிதைவடைந்த ஆலயங்களை மீளக் கட்டியெளுப்புதல்
4. கிறிஸ்தவ வழிபாடுகளை ஒழுங்கமைத்தல்
5. இந்நாட்டில் கிறிஸ்தவ மக்களை ஒன்றுபடுத்தல் (1 × 4 = 4)

ஆகிய செயற்பாடுகளை மேற்கொண்டனர். அவர்களின் முயற்சியின் காரணமாக கிறிஸ்தவ சபைக்கு உறுதித் தன்மை யொன்று கிடைத்தது.

(v) **பிற்காலத்தில் திருவழிபாட்டிற்கு உரோமைக் கலாசார மூலங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற செல்வாக்குகள் நான்கினைக் குறிப்பிடுக.**

1. உரோம மரபுகளின் தாக்கங்களாகத் திருப்பலி ஆடைகள்
2. விளக்குகள்
3. தூபம் பயன்படுத்துதல்
4. திருவழிபாட்டு மன்றாட்டுக்கள்
5. இலத்தீன் மொழி
6. கிறகோரியன் இசை
7. குறிப்பிட்ட சில திருமண மரணச் சடங்கு முறைகள் ஆகியன குறிப்பிடத்தக்கவை. (1 × 4 = 4)

03)(i) **எசயா 11:1-9இன் படி அமைதியின் அரசின் (நீதியுள்ள அரசரின்) பண்புகள் நான்கினைக் குறிப்பிடுக.**

1. மெசியாவின் அரசு நீதியையும் தார்மீகத்தையும் உருவாக்கும்
2. தாவீதின் அரச பரம்மரையில் வருபவர்
3. இறை ஆவியின் ஞானம், மெய்யுணர்வு, அறிவுத்திறன் ஆற்றல் நுண்மதி ஆண்டவரைப்பற்றிய அச்ச உணர்வு என்பன அவரிடம் இருக்கும்
4. நீதியாகத் தீர்ப்பு வழங்குதல், உரிமைகளைப் பாதுகாத்துக் கொடுத்தல்
5. கீழ்ப்படிவுள்ள நம்பிக்கையின் வழியாக மெசியாவின் வல்லமை வெளிப்படும்
6. ஓநாய் செம்மறியாட்டுக் குட்டியோடு தங்கியிருக்கும் என்பதன் வழியாக அரசின் அடையாளம் காட்டப்படுகிறது. (1 × 4 = 4)

(ii) **கி.பி 431 இல் கூட்டப்பட்ட எபெசு பொதுச்சங்கத்தில் நெஸ்தோரிய பேதகத்தினைக் கண்டனம் செய்து எடுக்கப்பட்ட தீர்மானங்கள் நான்கினையும் குறிப்பிடுக.**

1. இப்பொதுச் சங்கத்தில் நெஸ்தோரிய பேதகம் கண்டனம் செய்யப்பட்டது
2. கிறிஸ்து இறை ஆளுமையையும் மனித ஆளுமையையும் ஒருங்கே கொண்டவராக இருக்கிறார்
3. இவரில் தெய்வீகம் மனுசிகம் எனும் இரு இயல்புகள் உண்டு
4. இயேசுகிறிஸ்து மரியாவின் உதரத்தில் மனுவுரு எடுத்து உற்பவமான இறைமகன் என்பதால் மரியாவைத் தேவதாய் எனக் கூறலாம் என எடுத்துரைக்கப்பட்டது.
5. இத்தகைய எபேசு சங்கத் தீர்மானங்கள் இறைமக்களால் வெற்றி ஆரவராத்தோடு ஏற்றுக் கொள்ளப்பட்டது. (1 × 4 = 4)

(iii) **அண்மைக்காலத்தில் உரோமையில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகளின் போது கண்டுபிடிக்கப்பட்ட டொமிற்றில்லாவின் சுரங்கக் கல்லறையிலிருந்து கிடைக்கப்பெற்ற கிறிஸ்தவ சுவர்ச்சித்திரங்களுக்குக் கருப்பொருளாக அமைந்த திருவிவிலியக் கதைகள் நான்கினைப் பெயரிடுக.**

1. ஆதாம் ஏவாள் கதை
2. மோசே கற்பாறையிலிருந்து தண்ணீர் வரச்செய்தல்
3. யோனா பெரிய மீனிலிருந்து காப்பாற்றப்பட்டமை
4. சிங்கத்திடமிருந்து தானியேல் பாதுகாக்கப்பட்டமை
5. இயேசுவும் திருத்தூதர்களும் காணப்பட்ட சித்திரங்கள் (1 × 4 = 4)

(iv) **பின்வரும் ஒவ்வொரு துறவற சபைகளையும் ஆரம்பித்தவர்களைப் பெயரிடுக.**

**(அ) செல்டிக்**

**(ஆ) கமல்டோலெஸ்**

**(இ) கார்த்தூஸியன்**

**(ஈ) சிஸ்டர்சீயன்**

(அ) செல்டிக் - புனித கொலம்பா எனும் அயர்லாந்து இன துறவி

(ஆ) கமல்டோலெஸ் - புனித றொமோல்ட் அடிகள்

(இ) கார்த்தூஸியன் - புனித புரூனோ அடிகள்

(ஈ) சிஸ்டர்சீயன் - மொனேஸ்மாவிகன் துறவியான றொபர்ட் (1 × 4 = 4)

(v) **இலங்கைத் திருச்சபையின் சமயங்களுடனான உரையாடலின் பெறுபேறுகள் நான்கு தருக.**

கிறிஸ்தவ சபைகளின் உரையாடலின் பெறுபேறுகளாக இலங்கையில் அண்மைக்காலத்தில் ஏற்பட்ட கிறிஸ்தவ சபையில் ஒற்றுமையின் பண்புகள் சிலவற்றைக் குறிப்பிடலாம்

1. கத்தோலிக்க ஆயர்களின் ஆணைக்குழுவும் ஏனைய கிறிஸ்தவ சபைகளும் ஒன்றிணைந்து வெளியிட்ட பொதுத் திருவிவிலியம்
2. உலக சபைகளோடு தொடர்புகொண்டு ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாதத்தில் சபையின் ஒற்றுமைக்காக செய்யப்படும் செபவாரம்
3. சமய சமூக செயற்பாடுகளின் போது நட்புடன் செயலாற்றுதல்
4. இறையியல் ஒன்றிப்பினை அடிப்படையாகக் கொண்டு நிகழ்த்தப்படுகின்ற கலைகள் மறைசார் கலந்துரையாடல்களும் உரையாடல்களும்
5. கல்விப் பொதுத் தராதர (உயரதர) பரீட்சைக்காக எல்லாக் கிறிஸ்தவ சபைகளுக்காகவும் பொதுவான பாடத்திட்டத்தினைத் தயாரித்தல். (1 × 4 = 4)

## பகுதி II

**நோக்கம் :**

**நற்செய்திகளைக் கற்பதன் வழியாக கிறிஸ்துவின் உறவில் வாழ்வார்**

04.(i) **சமநோக்கு நற்செய்தியின் ஆசிரியத்துவம், அது எழுதப்பட்ட காலம் என்பன பற்றி முன்வைக்கப்பட்டுள்ள முடிவுகள் ஐந்தினைச் சுருக்கமாக விபரிக்குக.**

**தீர்வுகள் அல்லது முடிவுகள்**

1. மத்தேயு - முதல் நூல்
   - மத்தேயு நற்செய்தி தான் மூல நூல் அதிலிருந்து மற்ற இருநூல்களும் உருவாயின. அரமேய மொழியில் முதலில் அவர் எழுதிய இயேசுவின் பொன்மொழிகளை பின்னர் அவரே கிரேக்க மொழியில் மொழிபெயர்த்தார் என்றும் இந்த மொழிபெயர்ப்பைச் சார்ந்தே மத்தேயு, மாற்கு, லூக்கா ஆகிய மூவரும் தங்கள் நூலை எழுதினார்கள் என்று கூறப்படுகிறது.
   - இக்கொள்கையை தற்பொழுது எவரும் ஏற்றுக்கொள்வதில்லை.

2. வாய்மொழிப் பாரம்பரியக் கொள்கை
   - நற்செய்தி எழுத்து வடிவம் பெறமுன் திருத்தூதர்களின் போதகம் ஏறக்குறைய ஒரே அமைப்பில் அரமயிக்கிலும் கிரேக்கத்திலும் அளிக்கப்பட்டு போதிக்கப்பட்டது.
   - திருச்சபை பரவியபோது இப்போதகங்கள் இடங்களுக்கேற்றவாறு சிறிது மாற்றமடைந்தன. இவ்வாறாக

வாய்மொழிப் பாரம்பரியம் சிறிது மாறியும் சிறிது மாறாமலும் போதிக்கப்பட்டது.

- இவ்வேறுபட்ட வடிவங்கள் காலப்போக்கில் எழுத்து வடிவில் மூன்று நற்செய்திகளாக தோன்றின.
- பலஸ்தீனாவின் வழக்கிலிருந்த வாய்மொழிப் பாரம்பரியத்தை மத்தேயு எழுதினார்.
- உரோமையில் கடைப்பிடிக்கப்பட்ட பாரம்பரியத்தை மாற்கு எழுதினார்.
- அந்தியோக்கியாவில் பவுல் நிறுவிய திருச்சபைகளில் இருந்த பாரம்பரியத்தை லூக்கா எழுதினார்.
- இக்கொள்கையில் சமநோக்கு நற்செய்திகள் எழுத்து வடிவம் பெறமுன் இருந்த வாய்மொழிப் பாரம்பரியத்தின் முதன்மையும் முக்கியத்தவமும் வலியுறுத்தப்படுகிறது.
- இவற்றிடையே காணப்படும் வேற்றுமைகளை ஒவ்வொரு நற்செய்தியிலுமுள்ள சிறப்பு நிகழ்வுகள் விளக்குகின்றன.
- அவற்றிடையே காணப்படும் ஒற்றுமைகள் விளக்கக்கூடியவை அல்ல. அப்படியே ஏற்றுக்கொண்டால் ஆசிரியர்களை ஏற்றுக் கொள்ளமுடியாது. அவர்கள் வாய்மொழிப் பாரம்பரியத்தை எழுதி வைத்த எழுத்தாளர்களே.

3. மாற்கு - மூல நூல்
   - மத்தேயு, லூக்கா நற்செய்திகளுக்கு மாற்கு நற்செய்தியே மூலமாகும். 18ம் நூற்றாண்டுவரை மத்தேயுவே காலத்தால் முந்திய நற்செய்தியாகக் கருதப்பட்டது. ஆனால் 18ம் நூற்றாண்டில் லார்ச்மான் ஹோல்ஸ்மன் எனும் விவிலிய அறிஞர்கள் இதனைக் காலத்தால் முந்திய நற்செய்தி என முடிவு செய்தனர்.

4. இருமூலக் கொள்கை
   - 1833ல் ஜே. உவைஸ் இக் கொள்கையை முன்வைத்தார். பின் உ.து ஹோல்ஸ்மன் அதனைப் பகிரங்கப்படுத்தினார். அதன்படி

1. மாற்கு நற்செய்தி நூலே முதன் முதல் எழுதப்பட்டது.
2. மத்தேயுவும் லூக்காவும் மாற்கு நற்செய்தி நூலை மூலமாகக்கொண்டு தமது நற்செய்தி நூல்களை எழுதினர்.
3. மத்தேயுவும் லூக்காவும் வேறொரு மூலத்தையும் (Q) பயன்படுத்தியுள்ளனர்.

5 நான்கு மூலக் கொள்கை

1.. மாற்கு நற்செய்தி முதன்முதல் எழுதப்பட்டது. அதனை மத்தேயுவும் லூக்காவும் பயன்படுத்தியுள்ளனர்.
2. மத்தேயு, லூக்கா நற்செய்திகளில் மாற்குவில் பயன்படுத்தப்படாத “Q” மூலம் பயன்படுத்தப்பட்டுள்ளது.
3. மத்தேயு நற்செய்தியில் மட்டும் “M” எனும் மூலம்
4. லூக்கா நற்செய்தியில் மட்டும் “L” எனும் மூலம் (2 × 5 = 10)

**(II) கிறிஸ்துநாதரின் மலைப்பொழிவு உமது கிறிஸ்தவ வாழ்க்கைக்கு எவ்வாறு முக்கியத்துவம் உடையதாய் அமையும் என்பதை அதன் நோக்கத்துடன் தொடர்புபடுத்தி ஐந்து உதாரணங்கள் தந்து விளக்குக.**

**மலைப்பொழிவின் முக்கிய நோக்கம்**

- இறையரசைத் தமதாக்கிக்கொள்ள விரும்புவோர் என்ன செய்ய வேண்டும்? அவர்களின் அறநெறி, அருள்நெறி எப்படிச் சிறந்திருக்க வேண்டும்? நாம் இறையரசுக்காக எவ்வாறு செபிக்க வேண்டும் என்பதை விளக்குவதே.
- மறைநூல் அறிஞர், பரிசேயர் ஆகியோரின் நெறியை விட உங்கள் நெறி சிறந்திருக்க வேண்டும்.
- இறையாட்சிக்கே உரிய மதிப்பீடுகளைக் கொண்டதாக இப்புதிய நெறி அமைய வேண்டும்.

- இறையரசில் நுழைய விரும்புவோர் 'உப்பும் ஒளியும்' திருச்சட்டம் நிறைவேறுதல் ஆகியவற்றில் கூறப்பட்டுள்ளவற்றை பின்பற்றி இறையரசில் நுழைவதற்கான தகுதியைப் பெறவேண்டும்.
- எமது அறச்செயல்களான ஈகை, நோன்பு, இறைவேண்டல் என்பன தந்தைக்குப் புகழ்ச்சி தருவனவாக அமைய வேண்டும். மேலும் பிறர்நலம் பேணுபவையாகவும் அமைதல் வேண்டும்.
- இறையரசின் வருகைக்காக செபிக்க வேண்டும்.
- விண்ணுலக செல்வங்களை சேர்த்து வைக்க வேண்டும்.
- இறைவன்மீது ஆழ்ந்த நம்பிக்கைகொண்டு எமது வேண்டுதலை இறைவன் கேட்பார் என்ற மனத்திடமும் கொண்டிருக்க வேண்டும்.
- எமது சமூக வாழ்வில் பிறர் எமக்குச் செய்ய விரும்புபவற்றை நாம் அடுத்தவருக்கும் செய்ய வேண்டும்.
- யாரையும் தாழ்வாகக் கருதி தீர்ப்பிடாமல் இருக்க வேண்டும்.
- எம் வாழ்வில் தந்தையின் சித்தத்தை நிறைவேற்றுபவர்களாக இருக்க வேண்டும்.

( இறையரசின் நோக்கத்திற்கு 5 புள்ளிகளும் வாழ்க்கையுடன் தொடர்புபடுத்தி மாணவரால் தரப்படும் 5 உதாரணங்களுக்கு 5 புள்ளிகளுமாக 10 புள்ளிகள் வழங்கப்படும். பொருத்தமான முறையில் ஒன்று சேர்த்து விளக்கியிருப்பின் 10 புள்ளிகள் வழங்கப்படும்.) $(2 \times 5 = 10)$

**நோக்கம் :**

**கல்வியை முன்னேற்ற திருச்சபையின் பங்களிப்பு பற்றி கற்றலும் பல மதங்கள் நிலவும் சூழலில் மாணவர்களை சமயங்களுக்கிடையே ஒற்றுமையை வளர்க்க அறிந்து திருச்சபையின் செயற்பாட்டில் பங்கேற்க வழிகாட்டுதல்.**

05.(i) **அன்று திருச்சபை ஐரோப்பாவில் கல்வியை முன்னேற்றுவதற்கு எடுத்த முயற்சி ஐரோப்பாவிற்கு மட்டுமன்றி முழு உலகத்திற்கும் முக்கியத்துவம் வாய்ந்ததாய் அமைந்தது இவ்வெளிப்பாட்டிற்கமைய கல்விக்கான கிறிஸ்தவ திருச்சபையின் அர்ப்பணிப்பை ஐந்து விடயங்களினூடாக விளக்குக.**

- உரோமைப் பேரரசின் வீழ்ச்சியோடு ஏற்பட்ட அரசியல் கலவரத்தினாலும் யுத்த சூழ்நிலையினாலும் ஐரோப்பாவில் அறிவு வளர்ச்சி மிகவும் பாதிப்புக்கள்ளானது. எனினும் கிறிஸ்தவ குருக்கள் தமக்குத் தேவையான அறிவை ஏதோவொர மட்டத்தில் பெற்றுக்கொள்வதற்கு முயன்றனர். மத்திய காலத்தில் எழுத்தறிவு, ஆரம்பக்கல்வியின் வளர்ச்சி, பல்கலைக்கழகங்கள் உருவாதல், வளர்ச்சியடைதல், பண்டைய உரோம கிரேக்க அறிவு, இஸ்லாமிய அறிவு ஆகியவை ஐரோப்பாவிற்குள் கொண்டுவரப்பட்டன. இது மேற்கத்தைய அறிஞர்களின் சிந்தனைக்கு, வளர்ச்சிக்கு முக்கிய காரணமாகியது.

- கி.பி 800ம் ஆண்டளவில் சாளிமேனின் ஆட்சிக்காலத்தில் அவரின் கட்டளையின்படி எல்லா ஆலயங்களுக்கும் மடங்களுக்கம் சொந்தமான பிரதேசங்களிழல் ஆரம்ப பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. எனினும் வைக்கிங் (viking)களின் ஆக்கிரமிப்புக்களினால் ஆரம்பக் கல்வியில் ஏற்பட்ட வளர்ச்சிக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டது. ஆயினும் ஆரம்பக் கல்வியானது சில மடங்களுக்குச் சொந்தமான ஆலயங்களை அண்டிய இடங்களில் வளர்ச்சியடைந்தது. எனினும் கி.பி 1050ம் ஆண்டுவரை மேற்கு ஐரோப்பாவில் ஆரம்பக் கல்வியின் தரமும் வளர்ச்சியும் மிகவும் குறைந்த நிலையிலேயே காணப்பட்டது.

- 11ம் நூற்றாண்டில் ஏற்பட்ட சமய மறுசீரமைப்பின் பெறுபேறாக மறைமாவட்ட ஆலயங்கரைள அண்டிய பாடசாலைகளில் சுதந்திரமான கல்வி கற்பிக்கப்பட்டது. கன்ரபெரி, சாட்டஸ், பரிஸ் ஆகிய இடங்கள் சுதந்திர கல்வியை வழங்கும் முக்கிய இடங்களாயின.

- பொதுநிலையினருக்கான பாடசாலைகள் உருவாதல் பொதுநிலையினருக்குக் கல்வியை வழங்கும் திருச்சபையின் பாடசாலைகளின் செயற்பாடுகள் ஆகியவை பொதுநிலையினரின் கல்வி பாரிய அளவிலான வளர்ச்சியடைவதற்கு வழிவகுத்தது.

- ஐரோப்பாவின் வரலாற்றில் உயர்கல்வியில் மத்திய காலத்தில் ஏற்பட்ட கல்வி வளர்ச்சியின் பெறுபே-றாக பல்கலைக்கழகங்கள் ஐரோப்பாவில் உருவாதல் மருத்துவவியலுக்கு முதலிடம் அளித்த சலேர்னா, சட்டக்கல்விக்கு முதலிடம் அளித்த பொலொஞ்ஞா பல்கலைக்கழகம் என்பன விசேடமானவையாகும்.

- 12ம் நூற்றாண்டில் மத்திய பகுதியில் பரிஸ் பல்கலைக்கழகம் உருவாகியது. பரிஸின் ஆயர்களினால் இது பல்கலைக்கழகமாகப் பிரகடனப்படுத்தப்பட்டதுடன் பல்வேறு நிறுவனங்கள் பீடங்களினால் இது முழுமைபெற்றது.

- 13ம் நூற்றாண்டில் இப் பல்கலைக்கழகம் நான்கு பீடங்களாகப் பிரிக்கப்பட்டது. இவை இறையியல் பீடம், மருத்துவ பீடம், திருச்சபையின் சட்ட பீடம், கலைப்பீடம், என்பனவாகும், கிறிஸ்தவ இறையியல் கிரேக்க இஸ்லாம் தத்துவங்கள் இங்கு கற்பிக்கப்பட்டதால் இவற்றின் தொடர்பு தத்துவ உலகில் பெரும் புரட்சியை ஏற்படுத்தியது. 14ம் நூற்றாண்டின்போது இப் பல்கலைகழகங்களுக்குச் சொந்தமான 40 தனியார் கல்லூரிகள் உருவாகின. இவை லௌகீக ஆன்மீகமானவையாகும். (2 × 5 = 10)

(ii) **திருச்சபையின் ஆரம்ப காலத்தில் கிறிஸ்தவர்களுக்கும் யூதர்களுக்கும் இடையேயான மோதல்களுக்கு ஏதுவான காரணிகளைச் சுருக்கமாக விளக்கி, இலங்கையில் மதங்களுக்கிடையேயான ஒற்றுமையை வளர்ப்பதற்கான ஆலோசனைகள் ஐந்தினை விபரிக்குக.**

- கிறிஸ்தவர்களின் தொகை அதிகரித்தது. குறிப்பாக சில யூத குருக்களும் இயேசுவை ஆண்டவரும் மெசியாவுமாக ஏற்று திருச்சபையில் இணைந்தது யூதர்களுக்கு கிறிஸ்தவர்கள் மேல் இருந்த வெறுப்பையும், எரிச்சலையும் அதிகரித்தது. இது கிறிஸ்தவர்களுக்கெதிரான ஒரு யூத கலாபனைக்கு வழிகோலியது.

- யூத கலாபனைக்கான காரணிகள்: யூதர்கள் என்ன காரணத்திற்காக இயேசுவைச் சிலுவையில் அறைந்தார்களோ அதே காரணத்திற்காக சீடர்களையும் கிறிஸ்தவர்களையும் பகைத்தனர்.

- யூதர்கள் படையுடன் வரும் வலிமைமிகு லௌகீக மெசியாவை எதிர்பார்த்தனர். எனவே மாட்டுத்தொழுவத்தில் பிறந்த தச்சன் மகனான இயேசுவை மெசியாகவாக ஏற்கவில்லை. காரணம் இயேசவின் போதனைகளும் செயல்களும் யூதரின் எதிர்பார்ப்புக்கு முரணாக இருந்தது.

- கிறிஸ்தவர்கள் இயேசுவின் இறைக்கொலைப்பழியை யூதர்கள் மேல் சுமத்தினர். அவர்களின் முன்னோர்கள ஆபிரகாம், யோசேப்பு, மோசே வழியாக பேசிய தூய ஆவிக்குச் செவிகொடுக்காமல் உரோமையரைக் கொண்டுகொலை செய்தார்கள் எனக்குற்றம் சுமத்தினர்.

- யூதர்கள் எருசலேம் ஆலயத்திற்கும், மோசேயின் சட்டத்திற்கும் முக்கியத்தவம் அழித்தனலர். ஆனால் கிறிஸ்தவர்கள் யூதப் பழக்க வழக்கங்களையும் , மோசேயின் சட்டங்களையும் மதிக்கவில்லை.

- சமுதாயத்திலே கிறிஸ்தவர்கள் பெருகியதால் பரிசேயர், சதுசேயர், தலைமைக்குருக்கள் தம் பதவி பறிபோய்விடுமென அஞ்சி கிறிஸ்தவர்களை எதிர்த்து வெறுத்துப் பகைத்தனர். (2 × 5 = 10)

**நோக்கம் :**

**வெளிநாட்டு மறைப்போதகங்கள், இலங்கையில் மறைப்பணியாளர்கள் கற்றுக்கொள்ளக்கூடிய முன்மாதிரிகளை பாராட்ட வழிகாட்டுதல்.**

06.(i) **போர்த்துக்கேயர் காலத்தில் இலங்கைக்கு வருகைதந்த மறைப்போதகர்கள் மூலம் நிறைவேற்றப்பட்ட பணிகளை ஐந்து காரணிகளினூடாக விளக்குக.**

- கி.பி 1543ல் முதன்முதலாக பிரான்சிஸ்கன் சபையைச் சேர்ந்த அருட்தந்தையர்கள் மறைத்தூதுவர்களாக இலங்கைக்கு வந்தனர். 7வது புவனேகபாகு அரசன் போர்த்துக்கேய அரசனுக்கு விடுத்த வேண்டுகொளுக்கிணங்க யோண் த சில்வா த கொண்டே என்ற அருட்தந்தையின் தலைமையில் 5 பேர் கொண்ட குழு இங்கு வருகைதந்தனர். புவனேகபாகு அரசனின் காலத்தில் மறைத்தூதவர்கள் ஊக்கத்தோடு மறைப்பிரச்சார செயலில் ஈடுபட்டனர். இலங்கையில் வடக்கு மேற்குப் பிரதேசங்களில் பணிசெய்து இடத்துக்கிடம் ஆலயங்களைக்கட்டி சமயத்தைக் கற்பித்து சிறு குழுக்களுக்கு திருமுழுக்குக் கொடுத்து சிறிய கிறிஸ்தவ சபையை நிறுவினர்.

- 1597ல் தர்மபால அரசன் இறந்தபோது கோட்டை இராட்சியம் போர்த்துக்கேயரின் ஆட்சிக்குட்பட்டதோடு மறைப்பிரச்சாரத்துக்கும் வழிவகுத்தது. இந்நாட்டுப் பணிக்காக வேறு சபைகளைச் சேர்ந்த மறைத்தூதுவர்கள் இலங்கைக்கு வர கொச்சின் ஆயர் உதவிசெய்தார்.
    - மகா ஓயாவின் வடக்கு - இயேசு சபை
    - சப்பிரகமுவ - அகுஸ்தீனார் சபை
    - ஏழு கோரளை - டொமினிக்கன் சபை
    - ஏனைய பிரதேசங்கள் - பிரான்சிஸ்கன் சபை

- மறைத்தூதுவர்கள் சமயப் பிரச்சாரத்தோடு சமூகப் பணிகளில் ஈடுபட்டனர். தேவாலயங்களுக்கு அருகில் சிறிய பாடசாலைகளை உருவாக்கி அடிப்படைக் கல்வியோடு சமயத்தைக் கற்பிப்பதற்கு வழிசெய்தனர். அருட்தந்தையர்கள் 'கொலிச்' எனும் பெயரில் உயரதரப் பாடசாலைகளை ஆரம்பித்தனர்.

- அநாதைப் பிள்ளைகளைப் பாதுகாத்தல், நோயாளரைப் பராமரித்தல், வயோதிபரை பாதுகாத்தல் கைத்தொழில் பாடசாலைகளை நிறுவுதல் போன்ற பணிகளை போர்த்துக்கேய மறைத்தூதுவர்கள் நிறைவேற்றினர்.

(II) **மனிதனின் மாண்பு பற்றி கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வியில் குறிப்பிடப்படும் படிப்பினைகளை உமது வாழ்க்கையுடன் தொடர்புபடுத்தி ஐந்து காரணிகளினூடாக விளக்குக.**

- இறைபடைப்பில் முதல் இடத்தை வகிப்பவன் மனிதன் (343)
- கண்களுக்குப் புலப்படுகின்ற இறைவனை அன்புசெய்யக்கூடியவன் (இஉதி 243)
- இறைவனின் சாயலாக உயர்நிலையில் படைக்கப்பட்ட மனிதன் பொருளல்ல, ஒருநபர் மனிதன் படைத்தவருக்கு நம்பிக்கையோடும் அன்போடும் உறவைக் கட்டியெழுப்பும் வாழ்வுக்கு அழைக்கப்பட்டுள்ளான் (357)

- இறைவன் மனிதனுக்காகவே அனைத்தையும் படைத்தார். (இஉதி121) இறைவனுக்குப் பணிபுரியவும், அன்பு செய்யவும் ஏனைய படைப்புகளை மீண்டும் அவரிடம் ஒப்படைக்கவுமே மனிதனைப் படைத்தார். (358)
- இறைசாயலாகப் படைக்கப்பட்ட மனிதனுக்கு உடலும் ஆன்மாவும் உண்டு. "அவன் நாசிகளில் உயிர் மூச்சை ஊத"(தொடக்கநூல் 2:7) மனிதன் முழுமையாக இறைதிட்டத்திற்கு உரியவனானான். (362)
- மனித உடல் "இறைவனின் உருவில்" பங்காளியாகிறது. மனித உடலானது ஆன்மாவினால் உயிர்பெற்று கிறிஸ்துவின் உடலுக்குள் தூய ஆவியாரின் ஆலயமாவதற்கு முழு மனிதன் அழைக்கப்பட்டுள்ளான். (364)
- திருச்சபை கற்பிக்கின்ற படி எல்லா ஆன்மாக்களும் இறைவனால் படைக்கப்படுவதே தவிர பெற்றோரால் உருவாக்கப்படுவதில்லை. இவ் ஆன்மா நித்தியமானதாகும். இறுதி உயிர்ப்பின் போது ஆன்மா மீண்டும் உடலோடு இணைகிறது. (366)

(2 × 5 = 10)

**நோக்கம்:**

**எம் நாட்டுக்கு வருகை தந்த வெளிநாட்டுத் துறவற சபைகளின் மறைத்தூதுப் பணிகள் பற்றி நன்கு அறிந்து தாமும் மறைத்தூதுப் பணியாற்ற முன்வருவர்.**

07.(i) **புனித யோசவ்வாஸ் அடிகள் ஆற்றிய இரக்கப்பணிகள் ஐந்தினைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக.**

1. கி.பி 1680ம் ஆண்டளவில் இலங்கையில் ஒரு கத்தோலிக்க குருவும் இருக்கவில்லை. கத்தோலிக்க மக்கள் ஒல்லாந்தரின் துன்புறுத்தல்களுக்கு உட்பட்டிருந்தமையை அறிந்து தமது பிறந்த நாட்டையும், சொந்தங்களையும் பிரிந்து, இந்நாட்டு மக்களுக்குப் பணிபுரிய வருவதற்காக எடுத்த முடிவே அவரது இரக்கப்பணியின் முதற்படியாகும்.

2. தான் அறியாத நாட்டில், தெரியாத மொழிபேசும் மக்களுக்கு பணிபுரிய பல தியாகங்களை மேற்கொண்டு இந்நாட்டு மொழியைக் கற்று கத்தோலிக்க மக்களை கால் நடையாகத் தேடிச் சென்று உதவினார்.

3. மக்கள் கடும் வரட்சியால் பாதிக்கப்பட்டபோது தமது செபத்தின் வல்லமையால் மழை பொழியச் செய்தார்.

4. அடிமைப்பட்டிருந்த காலத்தில் ஐரோப்பிய மறைத்தூதுவர்களால் கிறிஸ்தவரல்லாத சமயத்தவர் தவறான கொள்கைகள் உள்ளவர்கள் எனவும், சிலைகளை வழிபடுபவர்கள் எனவும் கருதப்பட்டனர். எனினும் வாஸ் அடிகளார் மதபேதம் ஏதும் பாராது எல்லோரையும் ஒரேமாதிரியாக கருதி இரக்கப் பணிகளில் ஈடுபட்டார்.

5. ஒல்லாந்தர் காலத்தில் 20 வருடங்களளவில் இலங்கையில் இருந்த ஒரேயொரு குரு யோசவ் வாஸ் அடிளாவர். அவர் வடக்கிலிருந்து தெற்கு வரையும், தெற்கிலிருந்து மத்திய மாகாணம் வரையும் பல்வேறு கஸ்லரமான பாதைகளின் வழியாக நடந்தே பிரயாணம் செய்தார்.

6. கண்டிக்குச் சென்ற முதல் சந்தர்ப்பத்தில் அவர் ஒரு ஒற்றர் என சந்தேகித்து அரசனால் சிறையில் அடைக்கப்பட்டார்.

7. கண்டியில் வைசூரி நோயால் பாதிக்கப்பட்ட மக்களை பராமரித்த அவர் இறுதியில் நோய்வாய்ப்பட்டு தமது 66வது வயதில் இறைபதம் அடைந்தார்.

(பொருத்தமான விடயங்கள் 5 எழுதியிருப்பின் 5x2 = 10 புள்ளிகள் வழங்கவும்)

**(II) ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் இலங்கைக்கு வருகை தந்த சில்வெஸ்ரர் பெனடிக்ற் சபை மறைத்தூதுவர்களின் பணி தொடர்பான ஐந்து விடயங்களைக் குறிப்பிட்டு விபரிக்குக.**

- இச்சபையின் பணி இலங்கையில் கி.பி 1845ல் யோசப் பிராவி அருட்தந்தை அவர்களின் இந்நாட்டு வருகையோடு ஆரம்பிக்கப்பட்டது. கி.பி 1857ல் அவர் தென் திருத்தூதரக மறைமாவட்ட (கொழும்பு) பிரதேசத்துக்குப் பொறுப்பானவராக நியமிக்கப்பட்டதோடு அப்பிரதேசத்தின் பணிக்காக மேலும் பெனடிக்ற் துறவற சபை அருட்தந்தையர்கள் இங்கு வருகை தந்தனர். கி.பி 1863-1878 ஆகிய காலப்பகுதியில் திருத்தூதரக மறைமாவட்டத்தை பொறுப்பேற்று நடத்தியவர் ஹிலேரியன் சில்லானி எனும் பெனடிக்ற் துறவற சபை ஆயராவார். அவரது காலத்தில் தெற்கு திருத்தூதரக மறைமாவட்டத்தின் முன்னேற்றத்துக்காக அவர் அரும்பணியாற்றினார்.
  - புனித லூசியா பேராலயம் கட்டத்தொடங்கியமை
  - புனித பெனடிக்ற் கல்லூரி உட்பட பல பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டமை
  - நல்லாயன் கன்னியர் சகோதரிகளை இந்நாட்டுப் பணிக்காக அழைத்தமை
  - கொழும்பை அண்டிய பங்குகளானமுகத்துவாரம், கிரான்பாஸ் ஆகிய பிரதேசங்களில் பெரிய ஆலயங்களைக் கட்டியமை
  - கத்தோலிக்கப் பத்திரிகைகள் (Ceylon Catholic Messenger கி.பி 1869ல்) உம் ஞானார்த்த பிரதீப்பய (கி.பி 1873ல்) ஆரம்பிக்கப்பட்டமை.
  - கண்டிப் பிரதேசத்தில் சில இடங்களுக்கு பெனடிக்ற் துறவற குருக்கள் அனுப்பப்பட்டமை.

- ஆகிய பணிகள் இதற்குரிய உதாரணங்களாகும். கி.பி 1878ல் ஹிலேரியன் சில்லானி ஆயரின் மரணத்துக்குப் பின்னர் கிளமெண்ட் பதேதோனி எனும் ஆயர் அப்பதவிக்கு நியமிக்கப்பட்டார். இவர் 4 வருடங்கள் கொழும்புப் பிரதேசத்தில் சமய நிர்வாக செயற்பாடுகளைச் செய்தார். இக்காலத்தில் பெனடிக்ற் குருக்களின் வருகை குறைவடைந்ததால் கொழும்புப் பிரதேசத்தில் பணியை முடித்துக் கொண்டதோடு அப்பணியை அமதி சபைக் குருக்களிடம் ஒப்படைத்தார். பெனடிக்ற் துறவற குருக்கள் ஊவா மாகாணத்திலும் பணி செய்தனர்.

- கி.பி 1887ல் இலங்கை கத்தோலிக்க சபை யாழ்ப்பாணம், கண்டி, கொழும்பு என மூன்று மறைமாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டது.
  - யாழ்ப்பாணம், கொழும்பு - அமதி சபை
  - கண்டி - பெனடிக்ற் சபை

- இவ்வாறாக பிரான்ஸில் அமல மரித் தியாகிகள் சபைக் குருக்களும் இத்தாலியில் பெனடிக்ற் சபைக் குருமாரும், பெல்ஜியத்தில் இயேசு சபைக் குருமாரும் மாறிஸ்ட் சகோதரரும், டிலாசால் சகோதரரும், துறவற சகோதரிகளும் இந்நாட்டுப் பணியில் இணைந்து இலங்கையில் சமய, கல்வி, சமூக, சுகாதாரம் போன்ற பிரிவுகளிலும் பணியில் ஈடுபட்டு மக்கள் பாராட்டத் தக்க பங்களிப்பைச் செய்தனர்.

(பணி தொடர்பான 5 விடயங்களைக் குறிப்பிட்டு விபரித்திருப்பின் 5x2 = 10 வீதம் புள்ளிகள் வழங்கவும்)

(அடிகளாரின் வரலாற்றுக்கு 5, ஆலோசனைக்கு 5 புள்ளிகள்)

**நோக்கம்:**

**ஆங்கிலேயர் காலத்தில் இலங்கைக் கல்வி வளர்ச்சிக்கு தம்மை அர்ப்பணித்தவர்களை அறிந்து, அவர்கள் சேவையைப் பாராட்டுவதோடு திருச்சபையின் தூதுப் பணிக்கு தம் ஒத்துழைப்பையும் வழங்க முன்வருவர்.**

08.(i) **அருட்தந்தை கிறிஸ்டோப்பர் பொன்ஜின் அடிகளாரின் வரலாற்றைச் சுருக்கமாகக் குறிப்பிட்டுஅடிகளார் உதவிபெறும் பாடசாலை (சுவீகரிக்கப்பட்ட பாடசாலை) முறை தொடர்பாக முன்வைத்த ஆலோசனைகள் ஐந்தினைத் தருக.**

- கி.பி1823ம் ஆண்டு செப்டம்பர் 23 அன்று பிறந்த இவர் கி.பி 1847ல் பரீஸ் மறைத்தூதுச் சபையின் அங்கத்தவராக இந்தியாவிற்குச் சென்று அங்கு 9 வருடங்கள் பணியாற்றினார். கி.பி1856ல் இலங்கைக்கு வருகை தந்து யாழ்ப்பாணத்தில் அமதி சபையில் சேர்ந்து பணியாற்றினார். இலங்கைத் தீவுக்கு வருகை தந்த காலம் முதல் இலங்கைக் கத்தோலிக்க சமயத்தின் குரலொலியானார். இவரது முயற்சியின் பயனாக இந் நாட்டில் உதவிபெறும் பாடசாலை முறை உருவாகியது. எனவே அவர் உதவி பெறும் பாடசாலையின் தந்தை என அழைக்கப்பட்டார். யாழ்ப்பாண ஆயராகவும் பின்னர் இந்நாட்டின் முதலாவது பேராயராகவும் நியமனம் பெற்றார். தேசிய குருமாரைப் பயிற்றுவிக்க இலங்கையின் முதலாவது பாடசாலையான புனித மார்ட்டீன் குருத்துவக் கல்லூரியை கி.பி 1869ல் ஆரம்பித்தார். கொழும்புக்கு வந்து பின் கி.பி 1883ல் புனித பேர்னாட் குருத்துவக் கல்லூரியைத் திறந்து வைத்தார். மேலும் கொழும்பு ஜோசப் கல்லூரியையும் வேறு கல்லூரிகளையும் திறந்து வைத்தார். கொழும்பு பெரிய வைத்தியசாலையில் பணிபுரிவதற்காக கத்தோலிக்க பெண்துறவிகளை ஈடுபடுத்தினார். பல்வேறு இடங்களிலுமிருந்து யாத்திரிகர்களை வரவழைத்து கி.பி 1870 யூலை மாதம் மடுத்திருத்தலத்தில் விழாவினையும் ஆரம்பித்து வைத்தார்.

உதவி பெறும் பாடசாலைகள்

- கி.பி 1869 – 1896 வரை இலங்கைப் பிள்ளைகளுக்கு ஆங்கில மொழிக்கல்வி மட்டுமே பெறக்கூடியதாக இருந்தது. ஆங்கிலம் கற்ற மாணவர்களுக்கு தம் தாய் மொழியையோ, நாட்டின் வரலாற்றையோ, சூழலையோ பற்றிய அறிவு இருக்கவில்லை. சகல பாடசாலை நூல்களும் ஆங்கில மொழியில் ஆக்கப்பட்டு கற்பிக்கும் முறைகளும், பரீட்சைகளும் ஆங்கிலத்தில் இடம்பெற்றன. இதனால் சுயமொழிக்கல்வி பற்றி அரசுக்கு ஆலோசனைகளை அருட்தந்தை கிறிஸ்டோப்பர் பொன்ஜின் அடிகளார் முன்வைத்தார்.

- ஆங்கில மொழியைப் போன்றே தேசிய மொழிகளும் பாடசாலைக் கல்வியில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என வலியுறுத்தினார். கல்வியில் தாய்மொழியை ஈடுபடுத்தும் தேவையை எடுத்துக்காட்டினார். அரசின் நியாயமற்ற கல்வி முறையையும் சகல கிறிஸ்தவ சபைகளுக்கும் பொதுவான கிறிஸ்தவ சமயத்தைக் கற்பிக்கும் முறையை கடுமையாக விமர்சித்தார். வீட்டைப் போன்று பாடசாலையிலும் பிள்ளையின் கல்வி சமயத்தோடு தொடர்புடையதாய் இருப்பதோடு அவ்வாறான கல்வியை அந்தந்த சமய நிறுவனங்கள் மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்தியதோடு எந்தச் சமயத்துக்கும் பாடசாலைகளை நடாத்துவதற்கு இடமளித்து பண உதவியும் அளிக்கவேண்டுமெனக் கூறினார். அருட்தந்தையின் ஆலோசனைகளை அரசின் கல்விக் கமிசன் சபை ஏற்றுக் கொண்டதோடு உதவிபெறும் பாடசாலை முறை ஆரம்பிக்கப்பட்டது. இதனால் பௌத்த இந்து இஸ்லாம் சமயங்களுக்கும் இக்கல்வி முறை பெருந்துணையாய் அமைந்தது.

(ii) **இன்றைய இலங்கைக் கிறிஸ்தவ திருச்சபையின் மூலம் நிறைவேற்றப்படும் தூதுப்பணியை மதிப்பிட்டு கிறிஸ்தவ மாணவராக அதற்கான உமது ஒத்துழைப்புக்களை ஐந்து காரணிகள் மூலம் விபரிக்குக.**

- இன்றைய உலகில் திருச்சபை இன மத சாதி பேதம் பாராது, சமூக நலனுக்கும் மனித அபிவிருத்திக்குமான செயல்களில் ஒரு சபையாகவும் இயக்கங்களாகவும் அமைப்புக்களாகவும் செயற்படுகியது.

- புனித யாக்கோபு கூறுவதற்கிணங்க மனிதனின் அன்றாட வாழ்க்கைத் தேவைகள் எல்லாவற்றையும் ஆராய்ந்து பிறர் நலப்பணிகளில் ஈடுபடுகின்றது. (கரிட்டாஸ் நிறுவனம்)

- மாணவர்களின் ஆன்மீகத்தை வளர்க்க மறைப்பாடசாலைகளை நிறுவி, மறைமாவட்டங்களில் அதற்கான நடு நிலையங்களையும் இயக்குனர்கரளையும் நியமித்து சிறப்பாக பணிசெய்கிறது.

- நோயாளிகள் நலம் பேணல், அநாதைப் பிள்ளைகள், திருமணம் செய்யாத அன்னையர்களைப் பாதுகாத்தல், பார்வையற்ற, பேச முடியாத, செவிப்புலனற்ற பிள்ளைகளைப் பாதுகாத்தலும் அவர்களுக்குப் பொருத்தமான கல்வியையும் தொழிற்பயிற்சியையும் பெற்றுக்கொடுத்தல்.

- வயோதிபர்களையும் விசேட இல்லங்களில் பாதுகாத்தல்.

- போர்களினால் இடம்பெயர்ந்தோர், அகதி முகாம்களில் இருப்போர், சுனாமி சூறாவளி போன்றவற்றால் பாதிக்கப்பட்டோரைத் தரிசித்து ஆறுதலளித்து அவர்களது தேவைகளை நிறைவேற்றுதல்.

( இவ்வாறான 5 கருத்துக்கள் எழுதியிருப்பின் 5 புள்ளிகளும், இவற்றினூடாக மாணவர் வழங்கும் ஒத்துழைப்புக்கள் 5 எழுதியிருப்பின் 5 புள்ளிகளும் வழங்கவும்)